**புத்தள பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தள பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 171,242 தொகையான செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சனவரி மாதம் செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டு தவறியமையின் காரணமாக கடன் கொடுத்தோர் வேறுபடுத்தப்படாதிருந்தது டன் எதிர்காலத்தில் கணக்குகள் சரியாக செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக மீளளிப்பு செய்யப்பட வேண்டிய நிலுவை சம்பளம் ரூபா 29,445 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சம்பளம் மீளளிப்பு பதிவேட்டில் பிழையாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் சரி செய்யயப்படுமென அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சபைக்குரிய 11 மயான நிலங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டதன் பின்னர் கணக்கீடு செய்யப்படுமென அறியத்தருகின்றோம். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 302,102,257 தொகையான காணி மற்றும் கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கையும், ரூபா 705,816 பெறுமதியான 02 வேலைகள் தொடர்பான உரிய கோவைகளும், ரூபா 2,082,535 நிலுவை ஆதனவரி மற்றும் ரூபா 3,728,695 கூட்டுத் தொகையான 70 பொது வைப்பு மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வும் கணக்காய்வுக்காக சமர்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் கால பகுப்பாய்வை சமர்ப்பிக்குமாறு விடய பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 19(xii) ஆம் பிரிவு | விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது 16 கடைகள் 2012 சனவரி 01 முதல் 30 வருடங்களுக்கு | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | 30 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | வேண்டும். | எழுத்து மூல தகவல்கள் காணப்படவில்லை என குறிப்பிடுகின்றோம். |
| (ii) | 122 மற்றும் 126 ஆம் பிரிவுகள் | சபை அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட 182 விளம்பர பதாதைகளுக்காக முன்னைய ஆண்டுக்காக அறவிட வேண்டிய ரூபா 819,100 தொகை அறவிடவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணம் அறவிடப்படவில்லை. |
| (iii) | 139 ஆம் பிரிவு | ஆதனவரி விதிப்பதன் கீழ் ஆதனங்கள் வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் தவணை அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை . | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை தவணை அறிக்கை கோரப்படாதிருந்த போதிலும் எதிர்காலத்தில் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 2,082,535 தொகையான ஆதனவரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படுகின்ற தொற்று நோய் நிலைமையின் கீழ் ஆதனவரி அறிவிடுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட போதிலும் எதிர்காலத்தில் அறவிடப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நி.பி 571 | ரூபா 70,582 கூட்டுத் தொகையான 02 வருடங்களுக்கு மேற்பட்ட 02 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி தொடர்பாக கவனம் செலுத்தி வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டும். | கோவைகள் இல்லை என்பதை அறியத் தருகின்றோம். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச | சபைக்குரிய 18 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்ப | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை |

| | | | |
|---|---|---|---|
| நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | ட வேண்டும். | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,040,151 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,208,783 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,219,792 | 2,230,617 | 1,429,243 | 801,374 | 2,219,792 | 2,231,792 | 1,294,043 | 937,749 |
| (ii) | வாடகை | 6,014,600 | 7,143,427 | 5,629,423 | 1,514,004 | 6,041,600 | 6,730,946 | 6,581,511 | 149,435 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,141,000 | 1,700,202 | 1,700,202 | - | 1,141,000 | 1,570,772 | 1,570,772 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 29,473,500 | 22,056,390 | 11,758,850 | 10,297,540 | 29,473,500 | 22,224,707 | 15,080,568 | 7,144,139 |
| | மொத்தம் | 38,848,892 | 33,130,636 | 20,517,718 | 12,612,918 | 38,875,892 | 32,758,217 | 24,526,894 | 8,231,323 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 2,513,581 தொகையான நிலுவை ஆதன வரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 1,337,433 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படாத பணம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதன வரித் தொகையில் 53 சதவீதமாகும். | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 1,979,550 தொகையான ஆதனவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 762,374 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 38 சதவீதமாகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட நிலுவை ஆதன வரி அலகுகள் 19 இலிருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 866,799 ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | ஆதன வரி அறவிடுவதற்குரிய ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காகவும் வரி அறவிடப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | புதிய மதிப்பீடு இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | ஆதன வரி மதிப்பீடு செய்யப்பட்ட 539 ஆதனங்களின் உரிமையாளர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | உரிமையாளர்கள் இனங்காணப்பட வேண்டும். | ஆதனங்களின் பெயர் திருத்த நடவடிக்கைகளின் மூலம் ஆதன வரி பதிவேட்டில் பெயரை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீர்க்கட்டண வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 441,523 தொகையான நிலுவை நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | ரூபா 266,223 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப்பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்கள் 07 இற்குரியதாக 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 114,000 தொகையான கட்டணம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 18,000 தொகையான கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொலைத்தொடர்பு கோபுர வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.5 இயந்திர உபகரண வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 09 வாகனங்கள் / இயந்திரங்களில் இருந்து 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் வாடகைக்கு விட்டதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 5,033,718 தொகையான நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,520,642 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 6,694,172 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 414,918 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 2,073,133 தொகை என்பன அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. |

## 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தொகை ரூபா 720,241 ஆகும். | நிலுவை மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 20 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | வாகன தரிப்பிடத்துக்காக உப விதியொன்று விதிக்கப்பட்டு அங்கீதகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் ஏனைய உப விதிகள் தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

(ஆ) **கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பரிசோதனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதுவரை கள பரிசோதனைக்காக வருகைதரவில்லை. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | இந்த விடயம் தற்போது ஒரு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டு அது தொடர்பான பொறுப்புக்களும் கையளிக்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) அனுமதியற்ற நிர்மாணங்கள் | | |
| புத்தள வாராந்த சந்தை காணியில் 04 அனுமதியற்ற நிர்மாணங்கள் காணப்படுகின்றமை 2018 | அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றப்பட வேண்டும். | நிர்மாணங்களில் இரண்டு இது வரையிலும் அகற்றப்பட்டிருந்ததுடன் ஏனைய நிர்மாணங்களை |

| | | |
|---|---|---|
| ஒக்தோபர் 30 ஆம் திகதி இனங்காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் மூன்று அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அகற்றுவதற்காக தேவையான நடவடிக்கைளை எடுப்பதற்கு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் மற்றும் 09 நபர்களுக்கும் 2016 முதல் 2018 வரையான ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 4,750,901 தொகையான கடன் தவணைப் பணம் மற்றும் பணம் என்பன செலுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் கொடுத்தோருக்கு ரூபா 3,648,884 தொகை ஏப்ரல் மாதம் வரையில் செலுத்தப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **பதவியணியினர் வெற்றிடங்கள்** | | |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 பதவிகளுக்குரிய ஊழியர்களின் வெற்றிடம் 17 ஆக காணப்பட்டது. | பதவியணியினர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) **ஊழியர் கடன்** | | |
| 26 ஊழியர்களிடமிருந்து 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது | நிலுவை ஊழியர் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | அறவிட முடியாதுள்ள மீதி தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்ற ரூபா 123,169 தொகையான கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை ஆதன வாடகை | | |
| | 1988 முதல் 2012 ஆம் ஆண்டு வரை சபைக்குரிய வாராந்த சந்தை, மாட்டிறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடை மற்றும் கோழி இறைச்சிக் கடை உள்ளடங்கிய 06 ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்காக அறவிட வேண்டிய ரூபா 1,176,445 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வாடகை அறவிடப்பட வேண்டும். | சில வாடகையாளர்கள் தற்போது மரணமடைந்துள்ளனர். |
| (ஆ) | அகற்றப்பட்ட கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை | | |
| | சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்டு அகற்றப்பட்ட 14 பழைய கடைகளில் இருந்து ரூபா 181,598 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று பதிவழிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது. |
| (இ) | வாராந்த சந்தை வாடகை | | |
| | புத்தள வாராந்த சந்தையை மீளாய்வாண்டிற்கு வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 1,193,384 நிலுவை வாடகைப் பணம் மற்றும் ரூபா 1,358,640 தொகையான தாமத | நிலுவை சந்தை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக வாடகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் செலுத்தாதவர்களுக்கு வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தண்டப்பணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) கடை வாடகை | | |
| சபையினால் நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 67 கடைகளிலிருந்து மாதாந்த வாடகை அறவிடப்படும் போது ஊவா மாகாண பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சபை நிதியத்திற்கு ரூபா 6,987,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மதிப்பீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காணிகள் உரித்து கையேற்கப்படாமை. | | |
| சபைக்குரிய பல்வேறு அளவுகளுடைய 30 காணிகளை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 52 காணிகளின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய காணிகளின் சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்படாமை. | | |
| மீளாய்வாண்டிற்காக காணி மற்றும் கட்டிடங்கள் | காணி மற்றும் கட்டிடங்கள் | எதிர்காலத்தில் மெய்மெய்யாய்வு |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தொடர்பான மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | மேற்கொள்ளப்படும். |
| (இ) | கையேற்கப்படாத நூலகப் புத்தகங்கள்<br>-------------------------------------- | | |
| | சபைக்குச் சொந்தமான 03 நூலகங்களில் இருந்து வாசகர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 196,551 கிரயமான 1051 நூலகப் புத்தகங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அதற்குப் பதிலாக பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நூலகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | வாகன பயன்பாட்டின் மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை தயாரிக்கப்படாமை<br>----------------------------------------- | | |
| | சபைக்குரிய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 5 இற்கு 2019 சனவரி 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியின் போது 559.7 மீட்டர் மணித்தியாலம் ஓடியிருந்ததுடன் 68 வேலைகள் நிறைவேற்றப்பட்டதாக நாளாந்த ஓட்டக்குறிப்புகளில் காண்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 520,604 தொகையான எரிபொருள் செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் வேலைகளுக்குரிய மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை எதிர்காலத்தின் போது தயாரிக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| (உ) வீதி பதிவேடுகளைத் தயாரித்தல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல். | | |
| சபைக்குச் சொந்தமான வீதிகள் தொடர்பாக அளவீட்டு வரைபடமொன்றை தயாரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 494,396 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த வீதிகள் மற்றும் சிறு வீதிகளுக்குரிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வீதிகள் மற்றும் சிறு வீதிகளுக்குரிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வீதி பதிவேட்டினை நாளது வரையாக்குவதற்கும், வீதிகளை அளப்பதற்கும் மற்றும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பேரிதயளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களையும் மேவுகை செய்யும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் |

நடாத்தப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு முதல் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.